**அனுப்புநர்**

திரு.அ.வில்லியம் ஜேசுதாஸ்
பேரூராட்சிகள் உதவி இயக்குநர்
காஞ்சிபுரம் மண்டலம்

**பெறுநர்**

செயல் அலுவலர்,
திருப்போரூர் பேரூராட்சி
செங்கல்பட்டு மாவட்டம்

**<u>ந.க.எண்.1909/2022 பேரூ1 நாள் – 07.09.2022</u>**

அய்யா,

**பொருள் :** பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – காஞ்சிபுரம் மண்டலம்– செங்கல்பட்டு மாவட்டம் – திருக்கழுக்குன்றம் பேரூராட்சி– வரித்தண்டலராக பணிபுரிந்த சவரிமுத்து (திரு) ஜெ – 19.05.2016ம் தேதியில் பணியிடையில் காலமானது – அன்னாருடைய வாரிசுதாரர் பிரியா (செல்வி) ச – என்பவருக்கு திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் வரித்தண்டலராக கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டது – தனியர் பணியில் சேர்ந்த நாளான 14.03.2018 முப முதல் பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்பட்டது – சார்வு செய்து சார்வு நகல் அனுப்ப கோருதல் – தொடர்பாக.

**பார்வை :**

1. அரசாணை (நிலை) எண்.54 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் (பேரூ1 ) துறை நாள்–12.12.1988.
2. அரசாணை (நிலை) எண்.31 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை நாள்.31.03.2017.
3. அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள்.26.03.2021.
4. மாவட்ட ஆட்சித்தலைவர், காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.567/2016 பேரூ2 நாள் 10.03.2018.
5. செயல் அலுவலர், திருப்போரூர் பேரூராட்சி கடிதம் ந.க.எண். 265/2022/அ1 நாள்– 01.06.2022.
6. மாவட்ட ஆட்சித்தலைவர், செங்கல்பட்டு அவர்களின் கடித ந.க.எண்.1909/2022 பேரூ1 நாள்– 02.08.2022.
7. பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.12487/2022 அ6 நாள்– 29.08.2022.

//******//

காஞ்சிபுரம் மண்டலம், செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் திரு.ஜெ.சவரிமுத்து என்பவர் வரித்தண்டலராக பணிபுரிந்த போது 19.05.2016 அன்று பணியிடையில் காலமானதால் அன்னாருடைய வாரிசுதாரரான செல்வி.ச.பிரியா என்பவருக்கு பார்வை–1ல் காணும் அரசாணைக்கிணங்க கருணை அடிப்படையில், திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணி நியமனம் செய்து, பார்வை –4ல் காணும் செயல்முறைகளில் காஞ்சிபுரம், மாவட்ட ஆட்சித்தலைவரால் ஆணையிடப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, தனியரது கருணை அடிப்படையிலான பணியினை வரன்முறை செய்யக்கோரி பார்வை –6ல் காணும் செங்கல்பட்டு, மாவட்ட ஆட்சித்தலைவரிமிருந்து பரிந்துரை செய்து கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை–7ல் காணும் பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறையில் தனியரது கருணை அடிப்படையிலான பணியினை, பணியில் சேர்ந்த நாளான **14.03.2018** மு.ப முதல் வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்படி, செயல்முறையானை இரு நகல்களில் தனியருக்கு சார்வு செய்து சார்வு நகலினையும், பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்ட நகலினையும், அசல் சான்றுகள் மற்றும் பணிப்பதிவேடு பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையினையும், இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க திருப்போரூர் பேரூராட்சி, செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**இணைப்பு– மேற்கூறியவாறு**

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
காஞ்சிபுரம் மண்டலம்

07/09/2022

7/9/22

பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28 அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை:– டாக்டர். இரா.செல்வராஜ்., இ.ஆ.ப.,

ந.க.எண். 12487/2022/அ6 நாள்: 29.08.2022

பொருள் : கருணை அடிப்படையில் பணி நியமனம் – காஞ்சிபுரம் மண்டலம் – செங்கல்பட்டு மாவட்டம் – திருக்கழுக் குன்றம் பேரூராட்சி – முன்னாள் வரித்தண்டலர் – சவரிமுத்து (திரு) ஜெ – 19.05.2016–ல் பணியிடை காலம் சென்றது – வாரிசுதாரரும் மகளுமாகிய பிரியா (செல்வி) ச – என்பவரை கருணை அடிப்படையில் திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிநியமனம் செய்யப்பட்டது – 14.03.2018 முற்பகல் வரித்தண்டலர் பணியில் சேர்ந்தது – பணிவரன்முறை செய்தல் – ஆணையிடப்படுகிறது

பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அலுவலகம்
(இ) காஞ்சிபுரம்
06 SEP 2022
காஞ்சிபுரம் மண்டலம்

பார்வை :
1. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.567/2016/பேரூ2, நாள். 10.03.2018
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (கியூ) துறை, நாள்.26.02.2021.
3. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் ந.க.எண்.1909/2022/பேரூ.1, நாள்.02.08.2022

*******

<u>ஆணை:–</u>

காஞ்சிபுரம் மண்டலம், செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து 19.05.2016–ல் பணியிடை காலமான திரு.ஜெ.சவரிமுத்து என்பவரின் வாரிசுதாரரும் மகளுமாகிய செல்வி.ச.பிரியா என்பவருக்கு பார்வை 1–ல் காணும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் வரித்தண்டலராகப் பணிநியமனம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் தனியர் 14.03.2018 முற்பகல் முதல் வரித்தண்டலர் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வந்துள்ளார். அதன் தொடர்ச்சியாக தற்போது திருப்போரூர் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து வருகிறார்.

அதனை தொடர்ந்து கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்ற செல்வி.ச.பிரியா என்பவரது பணியினை வரன்முறை செய்ய கேட்டு பார்வை 3–ல் காணும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து பரிந்துரை செய்து கருத்துரு வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் இந்நேர்வில் பரிசீலிக்கப்பட்டதில் பார்வை 2–ல் காணும் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(கியூ) துறை, நாள்.26.02.2021–ல்

வெளியிடப்பட்ட வழிமுறைகளின்படி நியமன அலுவலருக்கு ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற பேரூராட்சிகளின் ஆணையர் நிலையிலேயே இந்நேர்வில் பணிவரன்முறை செய்யலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் விபரங்களின் அடிப்படையில் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பேரூராட்சியில் வரித்தண்டலராக பணிபுரிந்து வரும் செல்வி.ச.பிரியா என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்காணும் விபரப்படி பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் / பதவி /தற்போது பணிபுரியும் அலுவலகம் | கருணை அடிப்படையில் முதன் முதலில் பணி நியமனம் செய்யப்பட்ட பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | செல்வி.ச.பிரியா வரித்தண்டலர் திருப்போரூர் பேரூராட்சி | திருக்கழுக்குன்றம் பேரூராட்சி | 14.03.2018 மு.ப | 14.03.2018 மு.ப |

மேலும் இப்பொருள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ளவும் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான பணிப்பதிவேட்டின் நகலினை இவ்வாணையரகத்திற்கு அனுப்பிடவும் காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை கேட்டுக் கொள்ளப்படுகிறது

பேரூராட்சிகளின் ஆணையர்

பெறுநர்

செல்வி.ச.பிரியா,
வரித்தண்டலர்,
திருப்போரூர் பேரூராட்சி.
செங்கல்பட்டு மாவட்டம்
(காஞ்சிபுரம் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் வாயிலாக)

நகல்:-

1. மாவட்ட ஆட்சித்தலைவர், செங்கல்பட்டு மாவட்டம்
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், காஞ்சிபுரம் மண்டலம்
3. செயல் அலுவலர், திருப்போரூர் / திருக்கழுக்குன்றம் பேரூராட்சி
4. அ6 இருப்புப் கோப்பு

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்
காஞ்சிபுரம் மண்டலம்
நாள்: 06.09.22

ந.க. 1909/2022, அ6,

பேரூராட்சிகள் உதவி இயக்குநர்
காஞ்சிபுரம் மண்டலம்.